கம்பு, சோளம் போன்ற தான்யங்களை கீழே கொண்டு வருகின்ற வண்டிகளுக்கு இம்மாதிரி சுங்க முறையில் வசூலித்து வருகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் குறிப்பிட்டது கீழே இருந்து போகின்ற வண்டிகளுக்குத்தான் லெவி முறையில் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற விவரத்தைப்பற்றி பரிசிலிக்கலாம்.

Engineering College for Tiruchirappalli

* 331 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is at present an offer by anybody from Tiruchirappalli to start an Engineering College at Tiruchirappalli;

(*b*) whether Government have accorded sanction to the same; and

(*c*) when it is proposed to start the college?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) to (*c*) The Municipal Council, Tiruchirappalli, and the Local Library Authority, Tiruchirappalli, have requested that the State and Central Governments should open an Engineering College at Tiruchirappalli. The Seshasayee Memorial College of Engineering Committee, Tiruchirappalli, has offered to start an Engineering College under its management at Tiruchirappalli. The matter is under consideration.

Educational survey

* 332 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் Educational Survey எப்போது எடுக்கப்பட்டது?

(ஆ) மறுபடியும் Educational Survey எப்போது எடுக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Educational Survey work was undertaken in this State in 1957–58.

(*b*) This question has not been considered at all.

Financial aid to hospitals from World Health Organisation

* 333 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) உலக சுகாதார ஸ்தாபனம் ஆஸ்பத்திரிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கி உள்ளது? ஜில்லாவாரியாக?

(ஆ) வடாற்காடு ஜில்லாவில் எந்தெந்த ஆஸ்பத்திரிக்கு எவ்வளவு பணம் கொடுப்பதாக ஒதுக்கியுள்ளது?